DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
C.C.No.246/2015
Deposition of witness for PW.2

| பெயர் | .. | கலிங்கராணி | சாதி | .. | |
|---|---|---|---|---|---|
| த.பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 14.7.2022

மு.வி – நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். அசா1 எனது க்ணவர். எதிரியை தெரியும். எனது மாமனாரும்மாமியாரும் சேர்ந்து திருவில்லிபுத்துரில் கடந்த 25 ஆண்டுகளாக வாடகை வீட்டில் குடியிருந்து தீப்பெட்டி தொழில் செய்து வந்தார்கள். அவர்கள் 1993 ம்ஆண்டு அவர்கள் குடியிருந்த வீட்டையும் அருகே இருந்த காலியிடத்தையும் கி்ரையத்திற்கு வாங்கினார்கள். எனது கணவருடன் மொத்தம் 4 பேர்கள் உடன் பிறந்தவர்கள். அதில் 2 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் ஆவார்கள். கடந்த 2006 ம்ஆண்டு எனது மாமனார் இருதயமும் மாமியார் பிரகாசியம்மாளும் சேர்ந்து எனது கணவ்ருக்கும் அவரின் தம்பி அருள்ராஜ் என்பவ்ருக்கும் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார்கள். கடந்த 2010 ம் ஆண்டு அந்த சொத்தில எனது கணவருக்கு பாத்தியமான சொத்தை எனக்கு தான செட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்தார். கடந்த 2011 ம் ஆண்டு எதிரிக்கும் அவரது மனைவி பெயருக்கும் போலியாக பத்திரம் தயார் செய்து திருவில்லிபுத்துர் நகராட்சியில் அந்த பத்திரத்தின் பேரில் தீர்வை ரசீது கேடடு மனுசெய்திருந்தார்கள். நகராட்சியிலிருந்து

எனது கணவருக்கு எதிரிகள் மனு செய்த விவரத்தை கூறி அதற்கு பதில் தருமாறு ஒரு அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள். அந்த அறிவிப்பின்படி நானும் எனது கணவரும் நகராட்சிக்கு சென்று எதிரி தாக்கல் செய்துள்ள பத்திரம் போலி பத்திரம் என்று மனு கொடுத்தோம். அதனால் நாங்கள் அளித்த பதில் மனுவை ஏற்றுக்கொண்டு எதிரிக்கு பத்திரத்தின்பேரில் ரசீது போட்டு தர மறுத்து விட்டார்கள். இதற்கிடையில் எனது மாமனார் இறந்து விட்டார். இதற்கிடையில் எனது மாமியார் வீட்டிலிருந்தபோது எதிரி மற்றும் அவரது ஆட்களும் சேர்ந்து எனது மாமியாரின் வீட்டிற்குள் நுழைந்து எனது மாமியாரை அடித்துள்ளார்கள். எனது மாமியாரையும் வீட்டிற்குள் விடாமல் தடுத்துள்ளார்கள். இது சம்மந்தமாக எனது கணவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்து அந்த மனுவின் உத்தரவின்பேரில் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
C.C.No.638/2019
Deposition of witness for PW.1